# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100, அண்ணா சாலை, கிண்டி,சென்னை–600 032
தொலைபேசி எண்: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in
இணையதள முகவரி: www.tnlbo.tn.gov.in

முன்னிலை : **திரு. மகேசன் காசிராஜன், இ.ஆ.ப (ஓ)**
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்.

ஆணை எண். 112/ந/2026,     நாள். 03.09.2026

இரா. மயில்சாமி,
புதுவிளாங்குடி, மதுரை.

– முறையீட்டு மனுதாரர்

1. நகராட்சி ஆணையர்,
   போடிநாயக்கனூர் நகராட்சி,
   தேனி மாவட்டம்.

2. Dr. அமுதா அன்பு செழியன்
   கட்டிட உரிமையாளர்,
   அருண் மருத்துவமனை,
   போடிநாயக்கனூர், தேனி மாவட்டம்.

– எதிர்மனுதாரர்கள்

மதுரை–18, புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, முதல் மாடி, பிளாட் எண்.5–A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. மயில்சாமி என்பவரின் 15.04.2026 நாளிட்ட புகார் மனு இம்முறைமன்ற நடுவத்தில் 20.04.2026 அன்று பெறப்பட்டு 112/ந/2026 என எண்ணிடப்பட்ட முறையீட்டு மனுவாக பதிவு செய்யப்பட்டது. மனுதாரரின் முறையீட்டு மனு பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

**ஆணை**

மதுரை–18, புது விளாங்குடி, செம்பருத்தி நகர், அய்யப்பன் தெரு, முதல் மாடி, பிளாட் எண்.5 A என்கிற முகவரியில் வசிக்கும் திரு. இரா. மயில்சாமி என்பவரின் 15.04.2026 நாளிட்ட புகார் மனுவில் கீழ்க்கண்ட புகார்களை தெரிவித்துள்ளார்.

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சிக்கு உட்பட்ட "அருண்" மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவனை கதவு எண். 51, உத்தமபாளையம் ரோடு பேருந்து நிலையம் எதிர்புறம் முகவரியில் இயங்கிவரும் மருத்துவமனை கட்டிடம் நான்கு புறமும் பக்க திறவிடங்கள் (Side set back) இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும் இக்கட்டிடத்திற்கு நான்கு பக்கங்களிலும் அரசு விதிகளின்படி 6 மீட்டர் (19 அடி) இடைவெளி இடம் விடவேண்டும். மேலும் இம்மருத்துவமனை கட்டிடத்திற்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் விடாமல் மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டுள்ளதால் உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளின் வாகனங்கள் ரோட்டில்

நிறுத்துவதினால் போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்து ஏற்பட்டு வருகிறது. மேலும் அருண் மருத்துவமனை கட்டிடம் 2000 சதுரடிக்கு மேல் உள்ளதாலும் மற்றும் வர்த்தக கட்டிடம் பொது மக்கள் பயன்படுத்தும் கட்டிடம் என்பதால் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் திட்ட அனுமதிபெற வேண்டும். ஆனால் திட்ட அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்ட மருத்துவமனை கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டி கடந்த 02.03.2026 தேதியில் பதிவு தபாலில் ஆணையாளர் போடி நகராட்சி அவர்களுக்கு புகார் மனு அளித்து இருந்தும் இது நாள் வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை. தமிழக அரசாணை (நிலை) எண்.99 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் (எ) துறை நாள் 21.09.2015 உத்தரவின்படியும் மற்றும் நீதி பேராணை மனு எண்.20527/2014ல் சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கபட்ட 01.08.2014ல் உத்தரவின்படி எனது புகார் மனுவை பெற்றுக்கொண்ட மூன்று தினங்களுக்குள் ஒப்புகை ரசீது வழங்கியும் ஒரு மாத காலத்திற்குள் நடவடிக்கை மேற்கொண்டு எனக்கு கடிதம் மூலம் தகவல் தெரிவித்து இருக்க வேண்டும். ஆனால் ஆணையாளர் அவர்கள் அரசாணை மற்றும் உயர்நீதிமன்ற உத்தரவை நடைமுறை படுத்த தவறிய ஆணையாளர் மற்றும் சம்மந்தபட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுத்தும் சட்டத்திற்கு புறம்பாக கட்டபட்ட அருண் மருத்துவமனை கட்டிடத்தின் மீது தமிழ்நாடு அரசாணை எண். 7 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ன் படியும் மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56, 57ன்படி மூடிமுத்திரையிட்டும் (Lock and Seal) மற்றும் அகற்றுதல் (Removal) போன்ற விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை மிகத்தாழ்மையுடன் வேண்டிக்கொள்கிறேன்.".

2. மனுதாரரின் புகார் மனு மீதான அறிக்கையை அனுப்புமாறு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தின் 29.04.2026 நாளிட்ட அறிவிப்பு மூலம் போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டார்.

3. எதிர்மனுதாரரான போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க.எண்.0474/2025/எப்1, நாள் 12.05.2026—ல் மனுதாரரின் குற்றச்சாட்டுகளுக்கு முறையே கீழ்க்கண்டவாறு விளக்கம் அளித்துள்ளார். அதில் –

"1) அருண் மல்டி ஸ்பெசால்ட்டி மருத்துவமனை கட்டிடம் நான்கு புறமும் பக்க திறவிடங்கள் (Side set back) இடம் விடாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டிடம் கட்டப்பட்டுள்ளது எனக் கோரப்பட்டுள்ள முறையீட்டிற்கு இவ்வலுவலகத்திலிருந்து கட்டிடம் கட்டிட விதிகளுக்கு முரணாக உள்ள விபரம் சுட்டிக்காட்டப்பட்டு, நகர் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவுகள் 56, 57 மற்றும் 80—Aன் கீழ் அருண் மல்டி ஸ்பெசால்ட்டி மருத்துவமனைக்கு படிவம் 1, 2 மற்றும் 3 வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

2) மனுதாரர் முறையீட்டில் கட்டிடத்திற்கு வாகனங்கள் நிறுத்துவதற்கு இடம் விடாமல் மருத்துவமனை கட்டிடம் கட்டப்பட்டுள்ளது என்கிற முறையீட்டிற்கு இவ்வலுவலகத்திற்கு நகர் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவுகள் 56, 57 மற்றும் 80—Aஇன் கீழ் அருண் மல்டி ஸ்பெசால்ட்டி மருத்துவமனைக்கு படிவம் 1, 2 மற்றும் 3 வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

3) மருத்துவமனை கட்டிடம் 2000 சதுரடிக்கு மேல் உள்ளதாலும் மற்றும் வர்த்தக கட்டிடம் பொதுமக்கள் பயன்படுத்தும் கட்டிடம் என்பதால் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் திட்ட அனுமதி பெற வேண்டும். ஆனால் திட்ட அனுமதி பெறாமல் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ள மருத்துவமனை கட்டிடத்தின் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என்கிற முறையீட்டிற்கு

இவ்வலுவலகத்திலிருந்து நகர் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவுகள் 56, 57 மற்றும் 80–Aஇன் கீழ் அருண் மல்டி ஸ்பெசால்ட்டி மருத்துவமனைக்கு படிவம் 1, 2 மற்றும் 3 வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

4) 02.03.2026ஆம் தேதியில் பதிவுத்தபால் ஆணையாளர் போடிநாயக்கனூர்நகராட்சி அவர்களுக்கு மனு அளித்திருந்தும் இது நாள் வரையிலும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்கிற முறையீட்டிற்கு இந்நகராட்சி ஆணையளராக 15.03.2026 ஆம் தேதி முதல் பதவியேற்ற பிறகு திரு. மயில்சாமி மதுரை அவர்களின் 02.03.2026 ஆம் தேதிய விண்ணப்பம் (இவ்வலுவலகம் கிடைக்கப்பெற்ற நாள் 03.03.2026)ல் கண்ட விண்ணப்பமானது எனது பார்வைக்கு வந்ததன் அடிப்படையில் அருண் மருத்துவமனை கட்டிடம் கட்டிட விதிகளுக்கு முரணாகி உள்ளதால் அருண் மல்டி ஸ்பெசால்டி மருத்துவமனை உரிமையாளர்கள் மீது நகராட்சி நிர்வாக இயக்குநரகம், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.8621/2022/டிபி2, நாள் 22.12.2022–ல் கண்ட நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கையில் தெரிவித்துள்ளபடியும் நகர் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவுகள் 56, 57 மற்றும் 80–Aஇன் கீழ் தற்போது படிவம் 1, 2 மற்றும் 3 வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது என்ற விபரத்தினை பணிவுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.'' என தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரான போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையர் மற்றும் கட்டிட உரிமையாளர் திருமதி. அமுதா அன்புசெழியன் ஆகியோரை 10.06.2026 அன்றைய விசாரணைக்கு ஆஜராகுமாறு இம்முறை மன்ற நடுவத்தின் 20.05.2026 நாளிட்ட அழைப்பாணைகள் அனுப்பப்பட்டன.

5. மனுதாரர் திரு. இரா. மயில்சாமி என்பவர் 10.06.2026 அன்று இம்முறை மன்ற நடுவத்தில் நடைபெற்ற விசாரணையில் கலந்து கொண்டு கீழ்கண்டவாறு தனது வாக்குமூலத்தை தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்பு நேரடியாக ஆஜராகி தனது வாக்குமூலத்தை கீழ்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“போடிநாயக்கனூர் நகராட்சிக்குட்பட்ட, உத்தமபாளயம் ரோடு, பேருந்து நிலையம் எதிர்புறம் கரட்டுப்பட்டி என்ற பகுதியில் இயங்கி வரும் அருண் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிடம் நான்கு பக்கங்களிலும் பக்க திறவிடங்கள் (Side set back) விடாமல் விதிமீறி கட்டப்பட்டுள்ளது. இதனால் விபத்துக்கள் ஏற்பட்டால் தீயணைப்பு வாகனம் மற்றும் ஆம்புலன்ஸ் வாகனங்கள் சென்று வர இயலாத நிலை உள்ளது. மருத்துவமனை விதிகளின்படி கட்டிட பக்க இடவெளி இடம் 6 மீட்டர் விடவேண்டும். ஆனால் 1 இன்ச்சு கூட இடவெளி விடாமல் கட்டிடம் கட்டப்பட்டுள்ளது. மேலும், வாகனங்கள் நிறுத்துவதற்கென இடம் விடாமல் கட்டப்பட்டுள்ளதால் மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளின் வாகனங்கள் சாலையில் நிறுத்தப்படுவதால் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதுடன் விபத்துக்களும் ஏற்படுகிறது. மேற்படி கட்டிடம் மாவட்ட நகர் ஊரமைப்பு இயக்ககத்தின் அனுமதி பெறாமல் இரண்டாயிரம் சதுர அடிக்கு மேல் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளதால், அரசுக்கு பல லட்சம் ரூபாய் வருவாய் இழப்பு ஏற்பட்டுள்ளது.

அருண் மல்ட்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை இயங்கி வரும் கட்டிடம் விதிமீறி கட்டப்பட்டுள்ளதால், அக்கட்டிடத்தின் மீது தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம் 1971, பிரிவு 56 மற்றும் 57ன் படியும் தமிழ்நாடு அரசாணை ஆணை எண். 7, வீட்டுவசதி மற்றும் நகர் ஊரமைப்பு துறை, நாள் 10.01.2023ன் படியும் மூடிமுத்திரையிட்டும் (Lock and Seal) மற்றும் அகற்றுதல் (Removal) போன்ற விரைவாக அமலாக்க நடவடிக்கை எடுக்க போடி நகராட்சி ஆணையருக்கு

உத்திரவிடுமாறு மாண்புமிகு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் அவர்களை தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

6. எதிர்மனுதாரரான போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரின் கடிதம் ந.க. எண்.0474/2026/எப்1, நாள் 06.06.2026ல், கடிதத்தில் போடிநாயக்கனூர் நகராட்சி நகர்மன்ற கூட்டம் 10.06.2026 ம் தேதி நடைபெற உள்ளதாலும், சட்டமன்ற தேர்தலுக்கு பிறகு நடைபெறும் முதல் கூட்டம் என்பதாலும் நகர்மன்ற தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்கவும் நகராட்சி ஆணையாளர் மேற்படி கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டியிருப்பதால் தனது சார்பாக நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் திரு. ம. சுகதேவ் என்பவரை 10.06.2026 அன்று உரிய ஆவணங்களுடனும், விரிவான அறிக்கையுடனும் விசாரணைக்கு நேரில் அனுப்பி வைக்கப்படுகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளப்பட்டதைத்தொடர்ந்து போடிநாயக்கனூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளர் 10.06.2026 அன்று நேரில் ஆஜராகி முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“அருண் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிடம் சட்டத்திற்கு புறம்பாக 2,000 சதுர அடிக்கு மேல் கட்டப்பட்டுள்ளதாலும் மேற்படி கட்டிடம் பொதுமக்கள் பயன்படுத்தும் மருத்துவமனை கட்டிடமாக உள்ளதாலும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை கடிதம் ந.க.எண்.8621/2022/டிபி2, நாள் 22.12.2022ன்படி அருண் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை அமைந்துள்ள கட்டிடத்தின் மீது நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56, 57 மற்றும் 80–Aன்கீழ் 23.03.2026 அன்று படிவம் 1ம், 04.05.2026 அன்று 2ம் மற்றும் 09.05.2026 அன்று 4ம் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் அருண் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிடத்தின் உரிமையாளர் 80–Aன்கீழ் அரசுக்கு மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து அதற்கான நகலை இணைத்து கால அவகாசம் கோரி 30.05.2026 அன்று நகராட்சிக்கு கடிதம் வழங்கியுள்ளார். மேற்படி மேல்முறையீடு செய்த விபரத்தினை மேற்படி துறையில் கேட்டு அதனடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்ற விவரம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.”.

7. இரண்டாம் எதிர்மனுதாரரான அருண் மருத்துவமனை கட்டிடத்தின் உரிமையாளர் Dr. அமுதா அன்புசெழியன் 10.06.2026 அன்று நடைபெற்ற விசாரணையில் நேரில் கலந்து கொண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் முன்னிலையில் தனது வாக்குமூலத்தை கீழ்க்கண்டவாறு பதிவு செய்துள்ளார்.

“அருண் மருத்துவமனை கட்டிடம் முதன்முதலில் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வந்தது. பின்பு பின்புறம் உள்ள இடத்தினை கொள்முதல் செய்து அதில் குடியிருந்து கொண்டு மருத்துவமனை கட்டிடத்தை விரிவு படுத்தினோம். மேற்படி வாடகைக்கு இருந்த கட்டிடத்தை கொள்முதல் செய்யும் போதே மேற்படி கட்டிடத்தில் பார்க்கிங் வசதி இன்றி இருந்தது. தற்போது கட்டிடத்தின் பின்புறம் வாங்கப்பட்ட இடத்தில் பார்க்கிங் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. நகராட்சியால் எங்களது அருண் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை அமைந்துள்ள கட்டிடத்தின் மீது அறிவிப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து 80–Aன்கீழ் அரசுக்கு மேல்முறையீடு செய்துள்ளோம். மேற்படி விவரத்தினை நகராட்சிக்கு தெரிவித்து, கால அவகாசம் கோரி 30.05.2026 கடிதம் வழங்கியுள்ளோம் என்ற விவரம் தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவத்தில் பணிந்து தெரிவித்துக்கொள்கிறேன்.”

8. மனுதாரரின் புகார்மனு, வாக்குமூலம், எதிர்மனுதாரரான போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை, வாக்குமூலம் மற்றும் 2ம் எதிர்மனுதாரரான கட்டிட உரிமையாளரின்

அறிக்கை, வாக்குமூலம் தொடர்புடைய ஆவணங்கள் இம்முறைமன்ற நடுவத்தால் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் விவரங்கள் கண்டறியப்பட்டன:-

தேனி மாவட்டம், போடிநாயக்கனூர் நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் "அருண்" மல்ட்டி ஸ்பெசாலிட்டி மருத்துவமனை கட்டிடம் அரசு விதிகளின்படி 6 மீட்டர் (19 அடி) இடைவெளி இடம் விடப்படாமலும், நான்கு புறமும் பக்க திறவிடங்கள் விடாமலும் சட்டத்திற்கு புறம்பாக கட்டப்பட்டுள்ளதால் உள்நோயாளிகள் மற்றும் புறநோயாளிகளின் வாகனங்கள் ரோட்டில் நிறுத்துவதினால் போக்கு வரத்து நெரிசல் ஏற்பட்டு விபத்து ஏற்படுகிறது என்பதும், அருண் மருத்துவமனை கட்டிடம் 2000 சதுரடிக்கு மேல் கட்டப்பட்டுள்ளதாலும் பொது மக்கள் பயன்படுத்தும் வர்த்தக கட்டிடம் என்பதாலும் மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகத்தில் திட்ட அனுமதிபெற்றிருக்க வேண்டும் என 02.03.2026 தேதியில் புகார் மனு அளித்தும் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதால் தமிழக அரசாணை (நிலை) எண்.99 பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்த (எ) துறை நாள் 21.09.2015 உத்தரவின்படியும் மற்றும் நீதி பேராணை மனு எண்.20527/2014ல் சென்னை உயர்நீதிமன்றத்தால் பிறப்பிக்கபட்ட 01.08.2014ல் உத்தரவின்படி தனது புகார் மனுவை பெற்றுக்கொண்ட ஒப்புகை ரசீது வழங்கியும் அரசாணை மற்றும் உயர்நீதிமன்ற உத்தரவை நடைமுறை படுத்த தவறிய ஆணையாளர் மற்றும் சம்மந்தபட்ட அலுவலர்கள் மீது ஒழுங்கு நடவடிக்கை எடுக்கவும், சட்டத்திற்கு புறம்பாக கட்டபட்ட அருண் மருத்துவமனை கட்டிடத்தின் மீது தமிழ்நாடு அரசாணை எண். 7 வீட்டுவசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் 10.01.2023ன் படியும் மற்றும் தமிழ்நாடு நகர் ஊரமைப்பு சட்டம், 1971, பிரிவு 56, 57ன்படி மூடிமுத்திரையிட்டும் (Lock and Seal) மற்றும் அகற்றுதல் (Removal) போன்ற விரைவான அமலாக்க நடவடிக்கை எடுக்க போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையர் அவர்களுக்கு உத்தரவிடுமாறு மனுதாரர் இம்முறைமன்ற நடுவத்தை நாடியிருப்பது மனுதாரரின் புகார் மனு மற்றும் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

அருண் மருத்துவமனை கட்டிடம் 2000 சதுரடிக்கு மேல் உள்ளதாலும் கட்டிடம் கட்டிட விதிகளுக்கு முரணாக உள்ள விபரம் சுட்டிக்காட்டப்பட்டு நகர் ஊரமைப்புச்சட்டம், 1971, பிரிவுகள் 56, 57 மற்றும் 80Aன்படி மேற்படி மருத்துவமனைக்கு படிவம்-1, படிவம்-2, படிவம்-3 ஆகியவைகள் வழங்கப்பட்டு, தொடர் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருவதும், நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை கடித ந.க.எண்.8621/2022/டிபி2, நாள் 22.12.2022-ன்படி அருண் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிடத்திற்கு மேற்கண்ட சட்டப்பிரிவின்படி படிவம்-4ம் வழங்கப்பட்டு தொடர் நடவடிக்கையில் இருந்து வருகிறது என்பதும், அருண் மல்டி ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிட உரிமையாளர் 80Aன் கீழ் அரசுக்கு மேல் முறையீடு செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்து அதற்கான நகலை இணைத்து காலஅவகாசம் கோரி 30.05.2026 அன்று நகராட்சிக்கு கடிதம் வழங்கியுள்ளதும் போடி நாயக்கனூர் நகராட்சி ஆணையரின் அறிக்கை மற்றும் நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்திலிருந்து அறிய முடிகிறது.

அருண் மருத்துவமனை கட்டிடம் முதன்முதலில் வாடகை கட்டிடத்தில் செயல்பட்டு வந்தது என்பதும், பின்பு பின்புறம் உள்ள இடத்தினை கொள்முதல் செய்து அதில் குடியிருந்து கொண்டு மருத்துவமனை கட்டிடத்தை விரிவு படுத்தியுள்ளனர் என்பதும், மேற்படி வாடகைக்கு இருந்த கட்டிடத்தை கொள்முதல் செய்யும் போதே மேற்படி கட்டிடத்தில் பார்க்கிங் வசதி இன்றி இருந்தது என்பதும், தற்போது கட்டிடத்தின் பின்புறம் வாங்கப்பட்ட இடத்தில் பார்க்கிங் வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது என்பதும், நகராட்சியால் அருண் ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை அமைந்துள்ள கட்டிடத்தின் மீது அறிவிப்பு வழங்கப்பட்டதைத் தொடர்ந்து 80-Aன்கீழ் அரசுக்கு மேல்முறையீடு செய்யப்பட்டுள்ளது என்பதும், மேற்படி விவரத்தினை நகராட்சிக்கு தெரிவித்து, கால அவகாசம் கோரி 30.05.2026 கடிதம் வழங்கியுள்ளதும் இரண்டாம் எதிர்மனுதாரரான அருண்

ஸ்பெஷாலிட்டி மருத்துவமனை கட்டிடத்தின் உரிமையாளர் Dr. அமுதா அன்புசெழியன் என்பவரின் வாக்குமூலத்திலிருந்து தெரிய வருகிறது.

இந்நேர்வில், மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற நீதிப்பேராணை மனு எண்.1028/2024 (W.P.No.1028/2024)–ல், 12.08.2024 அன்று வழங்கப்பட்ட தீர்ப்பில் கீழ்க்கண்டவாறு தெரிவிக்கப்பட்டுள்ளதைக் கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

"9. In view of the order passed by the Government in exercise of its power under Section 80-A of the Town and Country Planning Act, the impugned order passed by the first respondent giving recommendations is totally unwarranted. It is true that the impugned order is prior to the order of State Government. When there is a statutory remedy available to the person who has put up unauthorized construction, in such circumstances, exercising power under the Tamil Nadu Local Bodies Ombudsman Act to issue directions or recommendations to the official respondents will prejudice the statutory remedy available to the petitioner and the rights of individuals. xxx xxx xxx.".

எனவே, புகாருக்குள்ளான கட்டிடத்தினை வரன்முறை செய்ய மனுதாரர் நகராட்சியிடம் கால அவகாசம் கோரியுள்ள நிலையிலும், தமிழ்நாடு நகர் மற்றும் ஊரமைப்புச் சட்டம், 1971, பிரிவு 80–Aன்படி அரசுக்கு மேல்முறையீடு செய்து அம்மனுவின் நகலினை நகராட்சிக்கு சமர்ப்பித்துள்ளதைத் தொடர்ந்து மேற்படி முறையீடு செய்திருப்பது குறித்து வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறையில் விபரத்தினை கேட்டு அதனடிப்படையில் நடவடிக்கை எடுக்கப்படும் என எதிர்மனுதாரர் தரப்பில் விசாரணைக்கு ஆஜரான போடிநாயக்கனூர் நகராட்சி நகரமைப்பு ஆய்வாளரின் வாக்குமூலத்தை ஏற்று அரசிடமிருந்து பெறப்படும் ஆணையின் அடிப்படையில் உரிய தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ளும்படி போடிநாயக்கனூர் நகராட்சி ஆணையரை அறிவுறுத்தலாம் என இம்முறைமன்ற நடுவம் முடிவு செய்து அவ்வாறே ஆணையிடுகிறது.

2026–ஆம் ஆண்டு, செப்டம்பர் திங்கள் 03–ம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையுடன் இவ்வாணை வெளியிடப்படுகிறது.

//ஒப்பம்//
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

பெறுநர்

1) திரு. இரா. மயில்சாமி,
5/A, முதல் மாடி, அய்யப்பன் தெரு,
செம்பருத்தி நகர், புதுவிளாங்குடி.,
மதுரை – 625 018.

2) நகராட்சி ஆணையர்,
போடிநாயக்கனூர் நகராட்சி,
போடிநாயக்கனூர்,
தேனி மாவட்டம் – 625 513.

3) Dr. அமுதா அன்புசெழியன்,
கட்டிட உரிமையாளர்,
அருண் மருத்துவமனை,
உத்தமபாளையம் ரோடு,
போடிநாயக்கனூர், தேனி மாவட்டம்– 625 513.

4) நகராட்சி நிர்வாக இயக்குநர்,
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

5) இணை இயக்குநர் / ஒருங்கிணைப்பாளர் (Nodal Officer)
நகராட்சி நிர்வாக இயக்குநரகம்,
எண்.75, சாந்தோம் நெடுஞ்சாலை,
ராஜா அண்ணாமலைபுரம்,
எம்.ஆர்.சி.நகர், சென்னை – 600 028.

நகல்: மாண்புமிகு முறைமன்ற நடுவர் அவர்களின் தனிச் செயலர்
இ.கோ/உதிரி

//ஆணைப்படி/அனுப்பப்படுகிறது//

செயலாளர்.